# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 13.06.2025

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8953/B/2022**

திரு.ராஜேந்திரன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாசியர் அலுவலகம்,
வேப்பூர் வட்டம்,
கடலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (13.06.2025) காணொலி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர்/ மனுதாரர் | திரு.ராஜேந்திரன் அவர்கள் கடலூர் மாவட்ட ஆட்சியரக தேசிய தகவல் மையத்தின்(NIC) காணொலிகாட்சி அரங்கில் நேரடியாக ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.சாருலதா, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜரானார் |
| சட்டப்பிரிவு 6(1) மனுநாள் | 08.03.2022 |
| **கோரிய தகவல்**:- மனுதாரர், கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், ரெட்டாக்குறிச்சி கிராம நத்தம் வீட்டு மனை பட்டா எண்.290 வழங்கப்பட்ட நகர், மனு எண் மற்றும் இதர குறிப்புகள் அடங்கிய வேப்பூர் வட்ட கணக்கின் பதிவேட்டு நகல் ஆகியவற்றை தகவலாக வழங்ககோரி பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர் அவர்களுக்கு மனு அளித்துள்ளார். | |
| சட்டப்பிரிவு 6(3)-இன் படி மனுதாரரின் மனு மாற்றம் செய்யப்பட்ட நாள் | ...................... |
| பொது தகவல் அலுவலரின் பதில் கடிதம் நாள் | 24.03.2022 |
| சட்டப்பிரிவு 19(1) ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 09.04.2022 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் கடிதம் நாள் | ........................ |
| சட்டப்பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 18.05.2022 |

2. இன்றைய விசாரணையில் காணொலிகாட்சி மூலம் ஆஜரான மனுதாரர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கான உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, அவற்றை பெற்றுத்தரும்படி கேட்டுக்கொண்டார்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு அவர் கோரிய பட்டா எண்.290-இன் நத்தம் அடங்கல், நத்தம் சிட்டா, கிராம புலப்படம் (FMD) ஆகியவற்றின் நகல்கள் 12.06.2025 அன்று பதிவு தபாலில் அனுப்பப்பட்டதாக தெரிவித்து, ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். அதற்கு ஆஜரான மனுதாரர், பட்டா எண்.290-இல் தனது பெயருக்கு பதிலாக ராமசாமி என்பவரின் பெயர் எந்த ஆவணங்கள் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற தகவல் இன்னும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார். ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், சம்பந்தப்பட்ட கோப்பில் வெறும் அலுவலரின் சுறுக்க கையொப்பம் மட்டுமே இடம்பெற்றுள்ளது என்றும், அது யாரால், எப்போது இடப்பட்டது என்ற விபரம் அதில் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

4. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில், மனுதாரர் கோரும் பட்டா மாற்றம் தொடர்பான ஆவணங்கள் குறித்த தகவல்கள் எதுவும் ஒரு அரசு ஆவணத்தில் இல்லாமல் இருப்பது இவ்வாணையத்திற்கு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக உள்ளது. எனவே, மனுதாரருக்கு உரிய தகவல் கிடைக்கும்பொருட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள், வேப்பூர் வட்ட வட்டாட்சியர் அவர்கள், மனுதாரர் மற்றும் ராமசாமி ஆகிய இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி, நேரில் வரவழைத்து, மேற்படி பட்டா எண்.290 தொடர்பான ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையையும், எதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்ற தகவலை மனுதாரருக்கு 26.06.2025-க்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் வழங்கி, அதன் நகலையும், மனுதாரர் தகவலை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து, ஒரு அறிக்கையாக தயார் செய்து இவ்வாணையத்திற்கு பதிவு தபால் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் அனுப்பி வைத்து, 18.07.2025 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தின் தேசிய தகவல் மையத்தின் காணொலி காட்சி அரங்கில் 18.07.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரடியாக பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
2. ***மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8953/B/2022</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வேப்பூர் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாசியர் அலுவலகம்,
வேப்பூர் வட்டம்,
கடலூர் மாவட்டம் - 606 304.

**<u>மனுதாரர்:</u>**
திரு.ராஜேந்திரன்,
த/பெ.சாமிதுரை,
எண்.5, 2வது தெரு,
கிருஷ்ணன் நகர்,
விருத்தாசலம் நகரம்,
கடலூர் மாவட்டம் - 606 001.

Copy to: File
AK/PC